இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 03.12.2025

# காக்கும் அரசு!

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வட தமிழ்நாடு - புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் நிலவிய ‘டிட்வா’ புயலில் இருந்து மக்களைக் காக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு முன் கூட்டியே எடுத்தது. அதனால் எந்தப் பாதிப்பும் இல்லாமல் மக்கள் காக்கப்பட்டார்கள்.

புதிய புயல் உருவாகிறது என்று தெரிய வந்ததுமே சென்னை எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து, முன் எச்சரிக்கைப் பணிகளை ஆய்வு செய்தார்கள். கனமழை பெய்யும் மாவட்டங்களின் மாவட்ட ஆட்சிய ருடன் காணொளி காட்சி மூலமாக ஆலோசனை செய்து உரிய உத்தரவு களை பிறப்பித்தார் முதலமைச்சர் அவர்கள். ஒரு கோடி பேருக்குப் புயல் முன்னெச்சரிக்கை குறித்த குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்பட்டது.

‘டிட்வா’ புயலுக்கும், வடதமிழ்நாடு - புதுச்சேரி கடற்கரைக்குமான தூரம் குறைவாக இருப்பதால் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் உடனடியாகச் செய்ய உத்தரவிட்டார் முதலமைச்சர் அவர்கள். தாழ்வானப் பகுதியில் இருக்கும் மக்கள், மாற்று இடங்களில் உடனடியாக தங்க வைக்கப்பட்டார்கள்.

புயல் பாதிப்பு, அதனால் அதிக மழை வாய்ப்பு உள்ள மாவட்டங்களில் முகாம்கள் அமைக்க அரசு உத்தரவிட்டது. தமிழ்நாடு முழுவதும் 6 ஆயிரத்து 33 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் 1,449 மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டது. இதில் 55 ஆயிரத்து 165 பேர் பயனடைந்தார்கள். தமிழ்நாடு முழுவதும் வழங்க 5 கிலோ அரிசி பைகள் - 5 இலட்சம் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது. அரசின் முன்னெச்சரிக்கை ஏற்பாடு காரணமாக பெரிய உயிர்ச் சேதங்கள் இல்லை.

பொதுமக்கள் புயல் மழை நேரத்தில் தேவையின்றி வெளியில் செல்ல வேண்டாம் என்று அரசு அறிவித்தது. கட்டுமான இடங்களில் பேரிகேட் போட்டு பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் என்று உத்தரவிட்டது.

சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், மாநகராட்சி சார்பில் முன்னெச் சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டது.

**சென்னை முழுவதும் 215 இடங்களில் மழைக்கால நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு, அதில் இருக்கும் மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டு வருகிறது. மழை நீர் தேங்கி இருந்தால் அவற்றை அகற்றுவதற்கு அதி திறன் கொண்ட 1,496 மோட்டார்கள், சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள நவீன வசதிகள் கொண்ட 478 இயந்தி ரங்கள் மற்றும் வாகனங்கள், தாழ்வானப் பகுதிகளில் பொதுமக்கள் பாதிக்கப் பட்டு இருந்தால் அவர்களை மீட்பதற்கு 103 படகுகள், 60 நபர்கள் கொண்ட தேசியப் பேரிடர் மேலாண்மை படையினர், 30 நபர்கள் கொண்ட மாநிலப் பேரிடர் மேலாண்மை படையினர் போன்றவை தயார் நிலையில் நிறுத்தி வைக்கப் பட்டு இருந்தார்கள்.**

புயல் பாதிப்புகளை எதிர்கொள்ள சென்னை மாநகராட்சி உட்பட்ட பகுதி களில் மாநகராட்சி அலுவலர்கள், பொறியாளர்கள், தூய்மைப் பணியாளர் கள் என 22 ஆயிரம் பேர் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். 24 மணி நேர மும் செயல்படும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் மூலம் தொடர்ச்சியாக சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 22 சுரங்கப்பாதைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மழை யினால் சுரங்கப் பாதைகளில் நீர் சூழ்ந்தால் உடனடியாக நீரை அகற்று வதற்கு அதிநவீன மின் மோட்டார்கள் தயார் நிலையில் உள்ளன. இவற்று டன் கூடுதலாக சுரங்கப்பாதைகள் நீர் சூழ்ந்து பொதுமக்கள் பயன்படாத சூழல் உருவாகினால், பொதுமக்கள் பயன்பாட்டை தவிர்ப்பதற்கு தானியங்கி தடுப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளது.

**இங்குள்ள மக்களை மட்டுமல்ல; இலங்கை சென்று அங்கு சிக்கித் தவித்த தமிழர்களையும் தமிழ்நாடு அரசு காத்துள்ளது. கொழும்பு விமான நிலையத்தில் சிக்கித் தவித்த தமிழர்கள் தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சியால் விமானம் மூலம் தாயகம் திரும்பி உள்ளனர். துபாயில் இருந்து இலங்கை வழியாக இந்தியா புறப்பட்ட விமானத்தில் 150 தமிழர்கள் உட்பட 300 பயணிகள் பயணம் மேற்கொண்டனர். அவர்கள் அனைவரும் இலங்கையில் உள்ள கொழும்பு விமான நிலையம் வந்தடைந்த நிலையில் ‘டிட்வா’ புயல் எதிரொலி யால் இந்தியா திரும்ப முடியாமல் கொழும்பு விமான நிலையத்திலேயே சிக்கித் தவித்தனர்.**

**150 தமிழர்களும் உண்ண உணவு இல்லாமல், தண்ணீர் மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு வைக்கப் பட்டது. உடனடியாக தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசை தொடர்புகொண்டு பாதிக் கப்பட்ட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஏற்ப டுத்தித் தந்தது. பின்னர், தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சியின் காரணமாக இலங்கையில் சிக்கித் தவித்த மக்கள் பத்திரமாக தமிழ்நாடு திரும்பி உள்ளனர்.**

“மூன்று நாட்களாக இலங்கையில் சிக்கித் தவித்தோம், தொடக்கத்தில் எந்த ஒரு உதவியும் கிடைக்காமல் இருந்த நேரத்தில் ஊடகங்களில் செய்தி வெளியான பிறகு இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் மூலமாக உதவி கள் கிடைத்தது. அதற்கு முன்பாக அடிப்படை தேவைகள் கூட கிடைக்காமல் அவதிப்பட்டோம். மேலும் வானிலை மோசமாக இருப்பதன் காரணமாக இலங்கையில் இருந்து புறப்படும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதன் காரணமாகவே சுமார் மூன்று நாட்களுக்கு சொந்த ஊர்களுக்குச் செல்ல விமானம் கிடைக்கவில்லை. தூக்கமின்றி உணவின்றி இருந்தோம்.

**இலங்கையில் நாங்கள் பாதிக்கப்பட்டுள்ள செய்தி அறிந்து, தமிழ்நாடு அரசு சார்பில் வெளிநாடு தமிழர் வாழ் நலத்துறை அமைச்சர் நாசர் எங்களைத் தொடர்பு கொண்டு பேசினார். தூதரகம் சார்பில் அடிப்படை வசதிகளை வழங்க வலியுறுத்திய பிறகு எங்களுக்கான உணவு மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் கிடைத்தது” என்று பேட்டி அளித்துள்ளார்கள்.**

**கனமழையில் இருந்தும், கடல் சீற்றத்தில் இருந்தும் உள்ளூர் மக்களை மட்டுமல்ல; கடல் கடந்து சென்றவர்களையும் காத்துள்ளது தமிழ்நாடு அரசு.**

●●

## தொழில் நிறுவனங்களுக்கு ரூ.99,446 கோடி

# ஊக்கத் தொகைத் திட்டத்திற்குத் தேவையான தகுதிகள் என்ன?

## மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!



புதுடெல்லி, டிச. 3 -

வேலைவாய்ப்புடன் இணைக்கப் பட்ட ஊக்கத் தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட உள்ள ரூ.99,446 கோடி தொகையைப் பெறுவதற்கு, தொழில் நிறுவனங்களுக்கும் தொழிலாளர் களுக்கும் உரிய தகுதிகள் அறிவிக் கப்பட்டு விட்டதா? அப்படியானால் அவற்றின் விவரங்கள் என்ன?

இந்த திட்டத்தின் வெற்றிக்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்ய மேற்கொள்ளப்பட்ட முன்னோ டித் திட்டம் (பைலட் புராஜெக்ட்) ஏதாவது உண்டா? அப்படியானால் அதன் விவரம் என்ன? எந்த அடிப்ப டையில் இத்திட்டத்தின் கீழ் 3.5 கோடி வேலை வாய்ப்புகள் உருவாகும் என்று அரசு நம்புகிறது? இது தொடர் பாக தொழிலாளர் அமைப்புகளுடன் முன் கூட்டியே ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன? என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக மக்களவைக் குழுத்தலைவரான டி.ஆர்.பாலு அவர்கள் வினா எழுப்பினார்.

இந்த கேள்விக்கு நேற்று முன்தினம் (1.12.2025) பதில் அளித்த ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைக்கான இணை அமைச்சர் செல்வி. ஷோபா கரண்ட்லாஜே தனது எழுத்துப்பூர்வ மான பதிலில் தெரிவித்தது வருமாறு:-

“பிரதான் மந்திரி விக்சித் பாரத் ரோஜ்கார் யோஜனா” எனப் பெயர் சூட்டப்பட்ட, வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத் தொகைத் திட்டம் ஒன்றிய அமைச்சரவையின் ஒப்புதலுடன் 15.8.2025 முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் அனைத் துத் துறைகளிலும், குறிப்பாக தயாரிப் புத் தொழில்துறையில் வேலை வாய்ப்பு, பணிபெறும்திறன், சமுதாய பாதுகாப்பு உறுதி ஆகியவற்றை மேம்படுத்துவதாகும்.

இத்திட்டத்தை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு செயல்படுத்தும். திட்டச் செயல்பாடுக ளின் நடை முறைகள், தொழிலாளர் கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் ஊக்கத்தொகை பெறுவதற்கான தகுதி கள், ஏனைய வழிகாட்டுதல்கள் உள் ளிட்ட அனைத்து விவரங்களும் இதற் கென உருவாக்கப் பட்டுள்ள இணைய தளம் போர்ட்டலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் திட்டம் தொடர்பாக தொழில்சங்கங்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப் பட்டது என்று அமைச் சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

## ரூ.120 கோடி செலவில் தினந்தோறும் அன்னதானம்:

# கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – முனைவர் கோவி.செழியன் பங்கேற்பு!

*கும்பகோணம், டிச. 3 -*

*இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் நேற்று முன்தினம் (01.12.2025) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோ ணம், ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் கலந்து கொண்டனர்.*

*குடமுழுக்கிற்கு பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரி வித்ததாவது:-*

*முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் நாள் தோறும் திருப்பணிகள், குடமுழுக்குகள் மொட்டை கோபுரங்களை ராஜகோபு ரங்களாக ஆக்குகின்ற பணி கள், புதர் மண்டி கிடந்த குளங்களை தீர்த்த குளங் களாகவும், தெப்பக்குளங் களாகவும் மாற்றுகின்ற வரலாற்றுச் சாதனைகள், ரூ.120 கோடி செலவில் திருக்கோயில்களில் நாள் தோறும் அன்னதானம், நாள் முழுவதும் அன்ன தானம் வழங்கும் திட்டம் 13 திருக்கோயில்களுக்கு விரிவாக்கம், 25 திருக்கோயில் களில் மாதந்தோறும் 108 சுமங்கலி பெண்கள் பங் கேற்கின்ற திருவிளக்கு பூஜை, திருக்கோயில்கள் சார்பில் கட்டணமில்லாத திருமணங்கள், மாற்றுத் திறனாளி இணைகளுக்கு கட்டணமில்லாமல் திருக் கோயில் மண்டபங்கள். 4 கிராம் பொன்தாலி மற்றும் சீர்வரிசை பொருட்கள்,*

*ஆடி மாதத்தில் ஒரு லட் சம் சுமங்கலி பெண்களுக்கு மங்கல பொருட்கள் வழங் குதல், மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோயில் களுக்கும், இராமேசுவரத்தி லிருந்து காசிக்கும், அறு படை வீடுகளுக்கும் கட் டண மில்லா ஆன்மிகப் பயணம்,*

*ஆடி மாதத்தில் 10 அம்மன் திருக்கோயில்களில் கூழ் வார்த்தல், முதற்கட்ட மாக 10 திருக்கோயில்களில் பக்தர்களின் பச்சிளம் குழந் தைகளுக்கு காய்ச்சிய பால் வழங்கும் திட்டம், பழனி தண்டாயுதபாணி திருக் கோயில் சார்பில் நடத்தப்ப டும் பள்ளிகள் மற்றும் கல் லூரிகளில் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கும் திட் டம், விடுதி மாணவர்களுக் கும் மூன்று வேளை உணவு வழங்கும் திட்டம் என எண் ணற்ற திட்டங்களை வாரி வழங்கிக் கொண்டிருக் கின்ற அரசாக இந்த அரசு திகழ்ந்து வருகிறது.*

**31 திருக்கோயில்களில் குடமுழுக்கு!**

*இன்றைய தினம் தமிழ் நாடு முழுவதும் 31 திருக் கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. கும்ப கோணம் ஆதிகும்பேஸ்வ ரர் திருக்கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயிலாகவும், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற மகாமக திருவிழாவின் முதன்மை திருக்கோயிலாகவும் விளங்கு கின்றது. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை 3,896 திருக் கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்தேறிருக்கின்றது. வரும் ஜனவரி மாதத்திற்குள் இது 4 ஆயிரத்தை கடக்கும். இந்து சமய அறநிலையத்து றையின் வரலாற்றில் இது சிறப்புமிக்க சாதனையாகும்.*

*இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 75 புதிய மரத்தேர்கள் உருவாக்கப்பட்டுள்ள தோடு, 134 மரத்தேர்கள் மராமத்து செய்யப்பட்டுள் ளன. புதிதாக 5 தங்கத் தேர் களும், 9 வெள்ளித் தேர் களும் உருவாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் ஒரு தங்கத் தேர் மற் றும் 2 வெள்ளித் தேர்கள் நிறைவு பெற்று பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்த அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.*

*அதோடு மட்டுமல்லாமல் முல்லைக்கு தேர் கொடுத் தால் பாரியைப் போல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் தேர்களை பாதுகாக்கின்ற வகையில் ரூபாய் 30 கோடி செலவில் 200 திருத்தேர் கொட்டகைகள் அமைத் திட உத்தரவிட்டு அதற் கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.*

*1,059 திருக்கோயில் களுக்கு சொந்தமான ரூ.8,119 கோடி மதிப்பி லான 8,022.48 ஏக்கர் பரப் பளவிலான சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட் கப்பட் டுள்ளன. கடந்த ஆட்சியில் மாநில வல்லுநர் குழுவானது 3 மாதங் களுக்கு ஒருமுறை கூடி அனுமதி வழங்கிய நிலையை மாற்றி தற்போது 15 நாட் களுக்கு ஒருமுறை மாநில வல்லுநர் குழு கூடி இது வரை 14,498 திருக்கோயிலி களில் திருப்பணிகள் மேற் கொள்ள அனுமதி வழங்கப் பட்டுள்ளன.*

*கடந்த நான்கரை ஆண்டு கால ஆட்சியில் 12,577 திருக்கோயில்களில் ரூ.7,147 கோடி மதிப்பீட்டில் 28,658 திருப்பணிகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.*

*குறிப்பாக உபயதாரர்கள் மட்டும் ரூ.1,558 கோடி மதிப்பிலான 12,017 திருப் பணிகளை செய்து தருகின் றனர். இது இந்த அரசின் மீதும், இந்து சமய அறநிலை யத்துறையின் மீதும் உபயதா ரர்கள் வைத்துள்ள நம்பிக் கையையும், வெளிப்படை தன்மையோடு இறைவனுக் கான பணிகள் முறையாக செயல்படுத்தப்படுகின்றது என்பதை வெளிப்படுத்துவ தாக அமைந்துள்ளது.*

*ஆதிகும்பேஸ்வரர் திருக் கோயிலுக்கு உபயதார் நிதி, திருக்கோயில் நிதி மற்றும் பொது நலநிதியின் மூலம் ரூ. 3.70 கோடி செலவில் திருப்பணிகள் மேற் கொள் ளப்பட்டு இன்று குட முட முக்கு நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயில் தெற்கு கோபுரமான மொட்டை கோபுரத்தினை ரூ.3.65 கோடி மதிப்பீட்டில் ஐந்து நிலை இராஜகோபுரமாக கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர் வாக அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வரும் ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்திற்குள் மொட்டை கோபுரத்திற்கான திருப் பணிகள் தொடங்கப்படும்.*

*திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்த அள வில் ஆட்சி அதிகாரம் ஒரு பக்கம் இருந்தாலும், இந்து சமய அறநிலையத்துறை யோடு ஒருங்கிணைந்து செயலாற்றுகின்றது என்ப தற்கு எடுத்துக்காட்டாக இந்த மாவட்டத்தின் அமைச்சர் அருமை அண் ணன் கோவி. செழியன் அவர்களும் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் க.அன்பழகன் அவர்களும் இதுபோன்ற திருப்பணி களுக்கு சட்டமன்ற கூடு கின்ற நாட்களில் அவர்கள் கோரிக்கை வைக்காத நாட் களே இல்லை என்று சொல் லும் அளவிற்கு தொடர்ந்து அடுக்கடுக்கான கோரிக்கை களை முன்வைத்து பெற்று வருகின்றனர். அவை அனைத்தையும் நிறைவேற் றுகின்ற வகையில் துறையும் செயல்பட்டு வருகிறது.*

*இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித் தார்.*

## கடந்த 3 ஆண்டுகளில் சுற்றுச்சூழலை மேம்படுத்த

# ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## நாடாளுமன்றத்தில் தருமபுரி எம்.பி. வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி!



*புதுடெல்லி, டிச. 3 -*

*கடந்த 3 ஆண்டுகளில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? நாடாளுமன்றத்தில் தருமபுரி எம்.பி.வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.*

*நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பங்கேற்றுள்ள தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி, தமிழ்நாட்டின் சுற் றுலா உள்கட்டமைப்பு மேம் ம்பாட்டிக்கு சுதேசதர்சன் திட்டம் உள்ளிட்ட பல் வேறு திட்டங்களில் கீழ் ஒன்றிய அரசு (CFA) மத்திய நிதி உதவியினை தமிழ்நாட் டிற்கு நீட்டித்துள்ளதா?*

*சுற்றுசூழல் சுற்று என்ற கருப்பொருளின் கீழ் குறிப் பாக தருமபுரி மாவட்டத் தில் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் சுற்றுச் சூழல் சுற்றுலா திட்டங் க ளின் விவரங்கள் என்ன?*

*தருமபுரி மற்றும் அதனை ஒட்டி உள்ள ஒகே னக்கல் வனப்பகுதிகளில் புதிய சுற்றுலா தலங்களை மேம்படுத்தும் வகையில் ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை தமிழ்நாட் டிற்கு வழங்கியுள்ளதா? வழங்கியிருந்தால் கடந்த 3 ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் அத்தகைய திட்டங்களுக்கு அங்கீகரிக் கப்பட்ட,விடுவிக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட நிதி களின் முழு விவரங்கள் சமூக அடிப்படையிலான சுற்றுலா முயற்சிகள், டிஜிட் டல் பிரச்சாரங்கள் மூலம் தருமபுரி மாவட்டத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்த எடுக்கப்பட் டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று ஒன்றிய சுற் றுலா துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷிகாவத் திடம் கேள்வி எழுப்பி உள்ளார்.*




திருச்சி தெற்கு மாவட்டத்தில் துணை முதல்வர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட – மாநகரப் பொறியாளர் அணி சார்பாக அரசு பள்ளிகளில் ஆர்.ஓ. வாட்டர் இயந்திரத்தை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துகொண்டு மாணவச் செல்வங்களுக்கு அர்ப்பணித்தார்.